**11.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ பொங்கல் கலைவிழா இன்று (11.01.2020) திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தஞ்சையில் உள்ள தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளோடு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழா நேற்று முன்தினம் (09.01.2020) சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலும், நேற்று (10.01.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலும் சிறப்பாக நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, இன்று (11.01.2020) திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழாவில்

மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த திரு.சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்களி மோகினி ஆட்டம் மற்றும் ஒப்பனா நடன நிகழ்ச்சியும்,

மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவைச் சேர்ந்த திரு.பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும்

இரவு 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மூன்று நாட்கள் நடைபெற்ற சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழாவை சுமார் 12,500 நபர்கள் தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.